1970 ஆகஸ்ட் 25]

மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் தேர்வு.

*5 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவ இன்டர்வியூவில் பொது ஞானத்தை ஒட்டி என்னென்ன கேள்விகள் கேட்க வேண்டுமென்கிற விதி ஏதாவது உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: பொதுவாக, பொது ஞானத்தைச் சோதிக்கக்கூடிய வகையில் கேள்விகள் கேட்கப்பட்டு வருகின்றன. அது வரவேற்கத்தக்கது. என்றாலும், பொது ஞானத்திற்கு அப்பாற்பட்ட கேள்விகளும் கேட்கப்பட்டு வருகின்றன என்பதைக் கனம் அமைச்சரவர்கள் அறிவார்களா? குறிப்பிட்ட சில அமைச்சர்களுடைய மனைவிகள் பெயரைக்கூடக் கேட்கும்படியான அளவு கேள்விகள் போயிருக்கின்றனவே, அது போன்ற போக்குகளைத் தடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்ததுண்டா? இனிமேலாவது எடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மருத்துவத் துறைப்பற்றி நேர்முக விசாரணையில் (இன்டெர்வ்யூ) எந்த நெருக்கடியும் ஏற்படவில்லை. வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில் அத்தகைய கேள்வி ஒருவரால் கேட்கப்பட்டதாக ஒரு செய்தி பத்திரிகையில் வந்தது. அதற்குப் பிறகு அப்படிப்பட்ட கேள்விகள் கேட்கப்படவில்லை என்று அக்குழுத் தலைவராக இருந்த திரு. இளம்வழுதி அவர்கள் உடனே மறுப்பு அறிக்கை விட்டார்கள். அப்படிக் கேள்வி ஏதும் கேட்கப்படவில்லை. அப்படிப் பதில் எதிர்பார்க்கப்படவும் இல்லை. ஆகவே, பொது அறிவைப் பரிசீலித்துப் பார்க்கும் அளவிலும், எல்லா நிலைகளிலும் கேள்விகள் கேட்கப்படும் அளவிலும் ஒரு அமைச்சருடைய மனைவியின் பெயர் தெரிந்திருக்கவேண்டும் என்று எண்ணுகின்ற நிலைமை எந்தக் குழுவுக்கும் இருக்காது; இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவும் மாட்டார்கள். ஆகவே, அந்த நிலை ஏற்படாது. அப்படிப்பட்ட கேள்வி வேளாண்மைக் குழுவைப் பொறுத்தவரையில் கேட்கப்படவில்லை என்று அக்குழுவின் தலைவர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, கேட்கப்பட்ட கேள்விகளும், அதற்கு மாணவர்கள் அளித்த பதில்களும் பதிவு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். ஏனெனில், வேண்டியவர்களுக்குச் சுலபமான கேள்விகளையும், வேண்டாதவர்களுக்குக் கடினமான கேள்விகளையும் கேட்பதாகவும், கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சரியான பதில் கொடுக்காதவர்களுக்கு அதிகமான மார்க்குகள் போடுகிறார்கள் என்ற சந்தேகத்திற்கு இடமளிக்காத வகையில் அவைகள் பதிவு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் கூறுவதுபோன்று ஒவ்வொருவரும் கேட்கும் கேள்விகளையும், அவற்றிற்கான பதில்களையும், பதிவு செய்வது என்றால் பல நாட்கள், பல மாதங்கள் ஆகக்கூடும். பொதுவாக ஒரு முறையை வைத்து, அவரவர்கள், எதெதில் திறமை படைத்தவர்கள் என்று கூறுகிறார்களோ அந்தத் துறையில் அறிவு இருக்கிறதா என்று குழுக்களிலே இருப்பவர்கள் பார்த்து, பொதுப் படையான முறையில் கேட்கிறார்கள். பதிவு செய்வது என்பது இயலாத காரியம்.

THIRU K. VINAYAKAM : Whereas these interviews are held to judge the general knowledge of the candidates that appear before the Interview Board and whereas we have to draft people with technical knowledge to test the students, will the Government resist the temptation of drafting Assembly Members to these Interview Boards at least in future?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் அசெம்பிளியில் இருக்கும் உறுப்பினர்களை அவ்வளவு சாதாரணமாகக் கருத வேண்டாம். இதில் இருப்பவர்கள் எல்லாத் துறைகளுக்கும் மேற்பட்ட நிலையிலிருந்து, எல்லாத் துறைகளிலும் கண்காணிக்கும் அளவில் சிறிய யோசனைகளைச் சொல்வதற்காக இந்த மன்றத்தில் இருக்கிறோம். கேள்விகள் கேட்கும்பொழுது ஒரு நியாயத்தின் அடிப்படையில், இதிதில் திறமையுடையவர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த திறமையைப் பெற்றிருக்கிறார்களா என்று பரிசோதிப்பதற்காகக் கேள்விகள் கேட்கின்றார்கள். பொதுவாக, இந்த இண்டர்வியூ செய்பவர்களுக்கு ஒரு யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. தெரியாத கேள்விகளை, அவர்களை மாட்ட வைக்க வேண்டியதற்காக கேள்விகளைக் கேட்கக் கூடாது என்றும், பெற்றிருக்கும் அறிவு உயர்ந்திருக்கிறதா என்று ஆய்ந்து பார்க்கும் நிலையில் இருக்க வேண்டுமென்றும் பொதுவாக அறிவுரைகள் கூறப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களை விலக்கி விட்டுத்தான் வைக்க வேண்டுமென்று இல்லை. அது தொடர்ந்து பல்லாண்டு காலமாக, பல குழுக்களில் இருந்து வந்திருக்கிறது இப்பொழுது வேண்டுமானாலும், குழுக்களின் அளவும், எண்ணிக்கையும் குறைந்திருக்கிறதே தவிர, ஏற்கெனவே எல்லாக் குழுக்களிலும் இடம்

1970 ஆகஸ்ட் 25]

பெற்றிருக்கிறார்கள். கல்லூரிகளில் போடப்பட்டிருந்தவர்கள் இப்பொழுது எடுக்கப்பட்டு அங்கு இருப்பவர்களையே போட்டிருக்கிறது. கணக்குப் பார்த்தால் முன்பு இருந்தவர்களைவிட இப்பொழுது இருப்பவர்கள் குறைவு.

*6 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்கள் தொகையின் அடிப்படையில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வைத்தியக் கல்லூரிகளில் இடம் அளிக்கப்பட வேண்டுமென்று மதுரைப் பல்கலைக் கழகம் தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்காவது அம்மாதிரி அதிகமான இடம் கொடுக்க பரிசீலனை செய்யப்படுமா ? தற்போது அந்த மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு எந்த அடிப்படையில் இடம் அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாவட்ட அடிப்படையில் மாணவர்களை, மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கக்கூடாது என்று சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பு, மாவட்ட அடிப்படையிலேதான், ஆங்காங்குள்ள மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து, அந்தத் தொகையின் அடிப்படையில் மாணவர்கள் மாவட்டவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், வேறு எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இல்லாவிட்டாலும், மருத்துவத் துறையில் படித்துத் தேர்ந்தவர்கள் பரவலாக எல்லா மாவட்டங்களுக்கும், எல்லா இடங்களுக்கும் செல்லும் வாய்ப்பு இந்தத் துறையில் இருப்பதால் மாவட்ட வாரியாகத் தேர்ந்தெடுக்கலாம் என்று அந்த முறையைப் பின்பற்றி வந்தது. ஆனால் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பிற்குப் பிறகு, அந்த முறையைப் பின்பற்றாமல், எல்லா இடங்களுக்கும் ஓர் இடத்திலேயே வைத்து, மாநில அளவில் பார்க்கப்பட்டு வந்தது. அதற்காக 4, 5 குழுக்கள் அமைத்து, தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள். அதிலே என்ன வேறுபாடு வந்தது என்றால், ஒரு குழுவிலே இருப்பவர்கள் தாராளமாக மார்க் போடுவார்களேயானால், அவர்கள் முன் வரிசையிலே வந்து விடுவார்கள். சில குழுக்களிலே இருப்பவர்கள் இதிலேயும் கொஞ்சம் கஞ்சத்தனத்தை வைத்து, மார்க் போடுவதைக் குறைவாகப்